[திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுபிப்ரமணியன்] [1982 மார்ச் 30

(முற்பகல் 10—20)

ஆகவே இந்த அரசும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கின்றபோது நம்முடைய மாநில அதிகாரிகள், ஏற்பட்டிருக்கின்ற சேதங்கள் எவ்வளவு, அதனால் விவசாயிகளுக்கு எவ்வளவு பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்ற விவரங்களை எடுத்து மத்திய அரசுக்கு அனுப்பி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, பயிர்பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் அந்த அடிப்படையிலே தான் செய்யப்படுகிறது. ஆனால் அதை இந்தத் துறை நேரடியாகக் கவனிக்காத காரணத்தினால், கூட்டுறவுத் துறையோடு இதுபற்றிக் கலந்து முடிவு செய்யும்.

6. அறிக்கை அளித்தல்.

பொதுக்கணக்குக் குழு

**திரு. எஸ். என். வி. சித்தன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, 1976–77-ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாகச் செலவழித்த தொகை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் 11-வது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்ட முன் வடிவுகள்

(அ) இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

**மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, 1982-ஆம் ஆண்டு இந்தியக் கூட்டண்மை (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிக திரு எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.